**திருச்செங்கோடு நகராட்சி**

**நகர் மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மானம், நாள்.29.12.2022 ன் உண்மை நகல்**

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2022 மற்றும் டிசம்பர் 2022 -ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.2059/2022/சி1)**

**நகர்மன்ற தீர்மானம் எண். 397 நாள்.29.12.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2022 மற்றும் டிசம்பர் 2022 -ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.2059/2022/சி1)**

**நகர்மன்ற தீர்மானம் எண். 398 நாள்.29.12.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான சீத்தாராம்பாளையம் மாரியம்மன் கோவில் முன்புறம் உள்ள காலியிடத்தை திருமதி.எம்.தங்கமணி என்பவர் வாடகை அடிப்படையில் உரிமத்திற்கு எடுத்திருந்தார். தற்போது உரிம காலம் முடிவுற்றதால் திருமதி.எம்.தங்கமணி என்பவரின் செலுத்திய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் கீழ்கண்ட வாறு பதியப்பட்டுள்ளது :—

| வ.எண் | தேதி | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 18.08.2006 | 32 (2006-07) VOL-VII | ரூ.15,000/- |
| 2 | 08.09.2006 | 32 (2006-07) VOL-VII | ரூ.12,600/- |
| மொத்தம் | | | ரூ.27,600/- |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.27,600/-ஐ திருமதி.எம்.தங்கமணி என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் .6780/2022/பி1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 399 நாள்.29.12.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் பில் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி விவரங்கள் 2021-2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு முதல் நான்காம் காலாண்டு வரையிலான காலங்களுக்கு திரு.பி.எஸ்.செந்தில் ஆடிட்டர் (வருமானவரி கலந்தாய்வர்) சேலம் அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.11,275/-க்கு நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி 2022-23-ல் இருந்து கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண் .4191202/0/பி1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 400 நாள்.29.12.2022.</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயக்கப்படும் வாகனங்களின் கழிவுநீக்க உதிரி பாகங்கள், உடைந்த தள்ளுவண்டிகள், பழைய சேதமடைந்த டம்பர் பிளேசர், காம்பேக்டர் தொட்டிகள் மற்றும் பயனற்ற இரும்பு கழிவுகள் இந்நகராட்சி அணிமூர் உரக்கிடங்கு பகுதியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவை துருப்பிடித்து மதிப்பிழந்து வருவதால் மேற்படி கழிவு பொருட்களை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்திட ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.7646/2022/எச்2</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 401 நாள்.29.12.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் அபே ஆட்டோ வாகனம் எண்.TN34 R1365 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 26.10.2022 அன்று அறிவிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 27.10.2022-ம் தேதி அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை | விகிதம் |
|---|---|---|---|
| 1. | சுப்ரீம் கார்ஸ்,<br>பரமத்தி ரோடு, நாமக்கல். | ரூ.90504 /- | அதிகம் |
| 2. | ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>திருச்செங்கோடு | ரூ.89149/- | குறைவு |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் காணும் ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனம் குறைவான தொகையை ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு வழங்கியுள்ளது. எனவே, குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய

ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும் மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**. <u>கோப்பு எண்.3983/2022/எச்2</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 402 நாள்.29.12.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 7**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் அபே ஆட்டோ வாகனம் எண். TN28 R1275 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 26.10.2022 அன்று அறிவிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 27.10.2022-ம் தேதி அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை | விகிதம் |
|---|---|---|---|
| 1. | சுப்ரீம் கார்ஸ்,<br>பரமத்தி ரோடு, நாமக்கல். | ரூ.90504/- | அதிகம் |
| 2. | ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>திருச்செங்கோடு | ரூ.89208/- | குறைவு |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் காணும் ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனம் குறைவான தொகையை ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு வழங்கியுள்ளது. எனவே, குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும் மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**. <u>கோப்பு எண்.3984/2022/எச்2</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 403 நாள்.29.12.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் எண். TN34 U5398 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 26.10.2022 அன்று அறிவிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 27.10.2022-ம் தேதி அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை | விகிதம் |
|---|---|---|---|
| 1. | சுப்ரீம் கார்ஸ்,<br>பரமத்தி ரோடு, நாமக்கல். | ரூ.88758/- | அதிகம் |
| 2. | ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>திருச்செங்கோடு | ரூ.87461/- | குறைவு |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் காணும் ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனம் குறைவான தொகையை ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு வழங்கியுள்ளது. எனவே, குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும் மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.3982/2022/எச்2</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 404 நாள்.29.12.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

எல்.ஐ.சி ஆப் இந்தியா, திருச்செங்கோடு நிறுவனத்திற்கு சொந்தமான மனை திருச்செங்கோடு, வார்டு –இ, பிளாக்-20, நகரளவை எண்.237/7-ல், 18589.27 சதுர அடி நிலம் முழுமை திட்டத்தின்படி (Master Plan) விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2-ல் அமைகிறது. இடம் மனையின் வழியாக C1, C1-40 அடி திட்ட சாலை அமைவதால், திட்ட சாலையினை நீக்கம் செய்து தர நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு முறையாக விண்ணப்பம் செய்து இவ்வலுவலகத்தில் 05.09.2022 அன்று மேற்படி நிறுவனத்தின் கிளை மேலாளர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். விண்ணப்பத்தின் மீது உரிய பரிசீலனை செய்து C1, C1-40' திட்டச்சாலை நீக்கம் செய்வது தொடர்பாக உத்தரவு வழங்க சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

எல்.ஐ.சி ஆப் இந்தியா நிறுவனத்தின் இடம் சர்வே வார்டு-இ, பிளாக்-20, நகரபுல எண்.237/7-ல் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள C1, C1-40' திட்ட சாலையை நீக்க, சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.6120/2022/எப்1)**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 405 நாள்.29.12.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, தெப்பக்குளம் தெரு, சொத்துவரி விதிப்பு எண்கள்.054/9343, 054/9344, 054/9345 மற்றும் 054/9346-ஆகியவற்றிற்கு 2020-2021-ஆம் ஆண்டு முதல் 2021-2022-ஆம் ஆண்டு முடிய செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி நிலுவை தொகையினை செலுத்தக் கோரி வழங்கப்பட்ட கேட்பு அறிவிப்பை ஆட்சேபித்து, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 124(I)-இன் கீழ் மனுதாரரின் வரிமேல்முறையீடு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாததை எதிர்த்து, நகராட்சி ஆணையாளரை எதிர் மனுதாரராக சேர்த்து, திரு.ஆர். ரவிசங்கர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு WP No.33273 of 2022 தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு, சென்னை உயர்நீதிமன்றம் கூடுதல் அரசு வழக்கறிஞர், திருமதி.மீரா ஆறுமுகம் அவர்களை கொண்டு வழக்காடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.8271/2022/அ1)**

**நகர்மன்ற தீர்மானம் எண். 406 நாள்.29.12.2022.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அம்மன்குளம் தினசரி காய்கறி அங்காடிக்கு கிழபுறம், திருமதி.சந்தானலட்சுமி என்பவர் எடுத்துள்ள காலியிடத்திற்கு கிழபுறமும் 10 x 16 அளவில் உள்ள காலியிடத்தை மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்து திரு.மா.பாலகிருஷ்ணன் த/பெ மாதேஸ்வரன் என்பவர் மனு செய்துள்ளார். இவ்விடத்தில் பொது ஆக்கிரமிப்பை தவிக்கும் பொருட்டும், நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் நோக்கத்துடன், மேற்படி காலியிடத்தினை மாத வாடகை அடிப்படையிலான உரிமத்திற்கு வழங்க ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் மூலம் விட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1) நகராட்சிக்கு வருவாய் கூடுதலாக கிடைக்க வாய்ப்புள்ளதாலும், ஆக்கிரமிப்பை தவிர்க்கும் பொருட்டும், நடைபாதைக்கும், பொது மக்களுக்கும் இடையூறு இல்லாமல், அனுமதிக்கப்பட்ட இடத்தைவிட கூடுதலாக ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்ககூடாது என்றும், நகராட்சிக்கு மேற்படி இடம் தேவைப்படும் பட்சத்தில் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் முதல் மூன்றாண்டு உரிமத்திற்கு விடலாம்.
2) ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலத்திற்கு டேவணித் தொகையாக ரூ.1,00,000/- நிர்ணயம் செய்யலாம்.

**கோப்பு எண்.7744/2022/அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 407 நாள்.29.12.2022.**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அம்மன்குள வணிக வளாக கடைக்கு கிழபுறம், திரு.செங்கோடன் என்பவர் எடுத்துள்ள காலியிடத்திற்கு தெற்குபுரத்தில் 10 x 18 அளவில் உள்ள காலியிடத்தை மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்து திரு.சி.வடிவேல் த/பெ சின்னபையன் என்பவர் மனு செய்துள்ளார். இவ்விடத்தில் பொது ஆக்கிரமிப்பை தவிக்கும் பொருட்டும், நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் நோக்கத்துடன், மேற்படி காலியிடத்தினை மாத வாடகை அடிப்படையிலான உரிமத்திற்கு வழங்க ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் மூலம் விட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1) நகராட்சிக்கு வருவாய் கூடுதலாக கிடைக்க வாய்ப்புள்ளதாலும், ஆக்கிரமிப்பை தவிர்க்கும் பொருட்டும், நடைபாதைக்கும், பொது மக்களுக்கும் இடையூறு இல்லாமல், அனுமதிக்கப்பட்ட இடத்தைவிட கூடுதலாக ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது என்றும், நகராட்சிக்கு மேற்படி இடம் தேவைப்படும் பட்சத்தில் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் முதல் மூன்றாண்டு உரிமத்திற்கு விடலாம்.
2) ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலத்திற்கு டேவணித் தொகையாக ரூ.75,000/- நிர்ணயம் செய்யலாம்.

**கோப்பு எண்.7881/2022/அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 408 நாள்.29.12.2022.**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சியின் அம்மன்குள வணிக வளாக கடைக்கு கிழபுறமும், உழவர் சந்தைக்கு மேற்குப்புறமும் உள்ள காலியிடத்தை, திரு.செங்கோடன் த/பெ சித்தநாதன் என்பவர் 01.11.2022 முதல் 31.10.2025 வரையிலான முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமத்திற்கு எடுதுள்ளார். தற்போது, மேற்கண்ட உரிமதாரரின் 25.11.2022ம் தேதியின் விண்ணப்பத்தில், தான் உரிமத்திற்கு எடுக்கப்பட்ட காலியிடத்தில் மற்றவர்களின் ஆக்கிரமப்பை தடுக்கவும், தொழிலுக்காகவும் மற்றும் பாதுகாப்பு நலன் கருதி தனது சொந்த செலவில் தற்காலிக கூடாரம் அமைத்துக்கொள்வதாகவும், பின் நகராட்சிக்கு மேற்படி காலியிடம் தேவைப்படும் பட்சத்தில், இருக்கிறப்படியோ அல்லது காலிமனையாகவோ ஒப்படைப்பு செய்வதாகவும் அதற்கேற்ப அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண் . 5615/ 2022/ அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 409 நாள்.29.12.2022.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தின் பேருந்து வெளியே செல்லும் இடத்திற்கு கிழபுறம் உள்ள ATM சென்டருக்கு அருகில் உள்ள காலியிடம் 1-யை திரு.வடிவேல் த/பெ முருகேசன் என்பவர் 01.11.2022 முதல் 31.10.2025 வரையிலான முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமத்திற்கு எடுதுள்ளார். தற்போது, மேற்கண்ட உரிமதாரரின் 25.11.2022ம் தேதியின் விண்ணப்பத்தில், தான் உரிமத்திற்கு எடுக்கப்பட்ட காலியிடத்தில் மற்றவர்களின் ஆக்கிரமப்பை தடுக்கவும், தொழிலுக்காகவும் மற்றும் பாதுகாப்பு நலன் கருதி தனது சொந்த செலவில் தற்காலிக கூடாரம் அமைத்துக்கொள்வதாகவும், பின் நகராட்சிக்கு மேற்படி காலியிடம் தேவைப்படும் பட்சத்தில், இருக்கிறப்படியோ அல்லது காலிமனையாகவோ ஒப்படைப்பு செய்வதாகவும் அதற்கேற்ப அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.: 3741/2022/ அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 410 நாள்.29.12.2022.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.31க்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்கான உரிமத்திற்கு கடந்த 28.01.2022, 06.05.2022, 07.06.2022, 24.06.2022, 06.07.2022, 15.07.2022, 21.09.2022, 26.10.2022 ஆகிய தேதிகளில் பலமுறை ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் விட்டும் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை, கடைசியாக 07.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில், ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது:-

| ஒப்பந்ததாரர் பெயர்/ முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|
| 1) திரு.கோபால்சாமி த/பெ அர்த்தனாரி,<br>114/1ஈ, டி.சி.எஸ். நகர், ஈரோடு ரோடு,,<br>திருச்செங்கோடு. | ரூ.10,900/-<br>(ஒரு மாதத்திற்க்கான வாடகை) |
| 2) திரு.அலாவூதீன் பாஷா த/பெ அப்துல்ரஹிம்,<br>11, காமராஜபுரம் தெரு -1, வேலூர் ரோடு,<br>திருச்செங்கோடு. | ரூ.11,000/-<br>(ஒரு மாதத்திற்க்கான வாடகை) |

**அலுவலகக் குறிப்பு :**

புதிய பேருந்து நிலைய கடை எண்.31க்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்கான உரிமத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2ல் கண்டுள்ள திரு.அலாவூதீன் பாஷா த/பெ அப்துல்ரஹிம் என்பவர் உச்ச கேள்வியாக ரூ.11,000/- (ஒரு மாதத்திற்க்கான வாடகை) என கோரியுள்ளார். இது இக்கடைக்கு அருகில் உள்ள புதிய பேருந்து நிலைய கடை எண்.29,30க்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வாடகையான

ரூ.10,580/- மற்றும் ரூ.9,200/-யை காட்டிலும் கூடுதலாக சென்றுள்ளது. மேலும், இக்கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையல் நகராட்சிக்கு தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி உச்ச கேள்வியை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்

**கோப்பு எண் .5556/2017/ அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 411 நாள்.29.12.2022.**

திரு.அலாவுதீன் பாஷா த/பெ அப்துல்ரஹிம் என்பவரின் உச்ச கேள்வி தொகை ரூ.11,000/- யினை உறுதி செய்யப்பட்டது

**பொருள் எண்.16**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.53க்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்கான உரிமத்திற்கு கடந்த 28.01.2022, 06.05.2022, 07.06.2022, 24.06.2022, 06.07.2022, 15.07.2022, 21.09.2022, 26.10.2022 ஆகிய தேதிகளில் பலமுறை ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் விட்டும் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை, கடைசியாக 07.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை, பொது ஏலத்தில் கீழ்கண்டவாறு இரண்டு ஏலதாரர்கள் மட்டும் கலந்துக்கொண்டு உச்ச கேள்வி கோரியுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது:-

| ஏலதாரர் பெயர்/ முகவரி | ஏல கேள்வி தொகை (ரூ) |
|---|---|
| 1) திருமதி.கா.ச.சுவாதி பிரியா த/பெ கார்த்திகேயன், 4/150, இராயர்தொட்டம், வடுகப்பட்டி, சேலம். | ரூ.11,200/- (ஒரு மாதத்திற்க்கான வாடகை) |
| 2) திரு.சஞ்சய்குமார் த/பெ ராஜவேல், 493, கச்சேரி தெரு, எம்.டி.வி. ஸ்கூல் எதிரில், வேலூர் ரோடு, திருச்செங்கோடு. | ரூ.11,100/- (ஒரு மாதத்திற்க்கான வாடகை) |

**அலுவலகக் குறிப்பு :**

புதிய பேருந்து நிலைய கடை எண்.53க்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்கான உரிமத்திற்கு வ.எண்.1ல் கண்டுள்ள திருமதி.கா.ச.சுவாதி பிரியா தபெ/ கார்த்திகேயன் என்பவர் உச்ச கேள்வியாக ரூ.11,200/- (ஒரு மாதத்திற்க்கான வாடகை) என ஏலத்தில் கோரியுள்ளார். இது இக்கடைக்கு அருகில் உள்ள புதிய பேருந்து நிலைய கடை எண்.51,52க்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வாடகையான ரூ.10,580/- யை காட்டிலும் கூடுதலாகவும், உயர்வாகவும் சென்றுள்ளது. மேலும், இக்கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையில் நகராட்சிக்கு தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி உச்ச கேள்வியை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**கோப்பு எண் .5556/2017/ அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 412 நாள்.29.12.2022.**

திருமதி.கா.ச.சுவாதி பிரியா த/ பெ\ கார்த்திகேயன் என்பவரின் உச்ச கேள்வி தொகை ரூ.11,200/யினை உறுதி செய்யப்பட்டது-

பொருள் எண்.17

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டிக்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து 31.03.2023 வரையிலான காலத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கடந்த 04.02.2021, 25.02.2021, 03.06.2021, 23.06.2021, 18.08.2021, 29.09.2021, 21.10.2021, 07.01.2022, 25.01.2022, 13.04.2022, 28.04.2022, 07.06.2022, 24.06.2022 ஆகிய தேதிகளில் பலமுறை ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் விட்டும் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை, கடைசியாக 09.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில், ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது:-

| ஒப்பந்ததாரர் பெயர்/ முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|
| 1) திரு.ஞானசேகரன் த/பெ ராதா,<br>126/72ஏ, ஏ.கே.ஈ ரோடு-1,<br>திருச்செங்கோடு. | ரூ.48,750/-<br>(மூன்று மாத தொகை) |
| 2) திரு.செந்தில்ராஜா த/பெ ஞானசேகரன்,<br>126/72ஏ, ஏ.கே.ஈ ரோடு-1,<br>திருச்செங்கோடு. | ரூ.48,450/-<br>(மூன்று மாத தொகை) |

**அலுவலகக் குறிப்பு :**

நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டிக்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து 31.03.2023 வரையிலான காலத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள திரு.ஞானசேகரன் தபெ ராதா/ என்பவர் உச்ச கேள்வியாக ரூ.48,750/- (மூன்று மாத தொகை) என கோரியுள்ளார். இது கடந்த 2020-2021ம் ஆண்டு குத்தகை தொகையான ரூ.1,76,000/-யின் மூன்று மாத சராசரி தொகையான ரூ.14,667/-. காட்டிலும் ரூ1583/- கூடுதலாக சென்றுள்ளது. 2021-2022 முதல் தற்போது வரை பலமுறை ஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையல் நகராட்சிக்கு தொடர் நிதியிழப்பாக உள்ளதை தவிர்க்கும் பொருட்டு மேற்படி உச்ச கேள்வியை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**கோப்பு எண் .9202/2020/ அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 413 நாள்.29.12.2022.**

திரு.ஞானசேகரன் த/ பெ ராதா ன்பவரின் உச்ச கேள்வி தொகை ரூ.48,750/ யினை உறுதி செய்யப்பட்டது.-

**பொருள் எண்.18**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய பழைய கடை எண்.24 மற்றும் 25ல் தமிழ்நாடு வாணிபக் கழகம் டாஸ்மாக் லிட்., நாமக்கல் சார்பில் மதுபான சில்லரை விற்பனைக் கடைகளை மாத வாடகை அடிப்படையில் ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்க்கான உரிமத்திற்கு வைத்துக்கொள்ள நகராட்சியால் தெரிவிக்கப்பட்டிருந்த வைப்புத்தொகை ரூ.1,50,000/-யும், மாத வாடகை ரூ.9,110/- (+) ஜி.எஸ்.டி ரூ.2,000/- சேர்த்து மொத்த தொகையாக ரூ.11,110/-யை கடைகளுக்கு தனித்தனியே செலுத்த சம்மதம் தெரிவித்த மாவட்ட மேலாளர், டாஸ்மாக் லிட், நாமக்கல் அவரிடமிருந்து கடந்த 26.08.2022ல் கடிதம் வரப்பெற்றுள்ளது. இக்கடைகளுக்கு 2017 முதல் 2021 வரையிலான ஆண்டுகளிலும், 28.01.2022, 06.05.2022, 07.06.2022, 24.06.2022, 06.07.2022, 15.07.2022, 21.09.2022, 26.10.2022, 07.12.2022 ஆகிய தேதிகளில் பலமுறை ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையில் நகராட்சிக்கு தொடர் நிதியிழப்பாகவே உள்ளதால் மேற்படி கடையினை மாத வாடகையாக ரூ.11,110/-க்கு முதல் மூன்றாண்டிற்க்கான உரிமத்திற்கு, அரசாணை (டி) எண்.135, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.07.1994ல் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் தவிர்த்து ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

நகராட்சியின் பழைய பேருந்து நிலைய பழைய கடை எண்.24 மற்றும் 25-க்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்கான உரிமத்திற்கு தமிழ்நாடு வாணிபக் கழகம் டாஸ்மாக் லிட்., நாமக்கல் சார்பில் மாத வாடகையாக ரூ.11,110/-செலுத்த சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இக்கடைக்கு அருகில் உள்ள பழைய பேருந்து நிலைய பழைய கடை எண்.23,26-க்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வாடகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதாலும்,, இக்கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையல் நகராட்சிக்கு தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும் மேற்கண்ட துறை அரசு சார்ந்த துறை என்பதால் ஒப்பந்தப்புள்ளி/ பொது ஏலம் தவித்து தமிழ்நாடு வாணிபக் கழகம் டாஸ்மாக் லிட்., நாமக்கல் துறைக்கு கடைகளை ஓதுக்கீடு செய்யலாம்.

**கோப்பு எண்.5238/2022/அ3**

**நகர்மன்ற தீர்மானம் எண். 414 நாள்.29.12.2022.**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.19**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32, கொல்லப்பட்டு ஹவுசிங் போர்டு (A & D Type) பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதியதாக பூங்கா (Park) அமைக்கும் பணிக்கு, அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.10.2022-ன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) - 2022-23 மற்றும் அம்ரூத் 2.0 (AMRUT) திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூஇலட்சத்தில். | KNMT நிதி ரூ. இலட்சத்தில் | AMRUT 2.0 நிதி ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.32, (வார்டு – G, சர்வே எண்.132, 133 ) கொல்லபட்டி ஹவுசிங் போர்டு (A&D Type) பகுதியில் புதியதாக பூங்கா (Park) அமைக்கும் பணி | 35.00 | 7.00 | 28.00 |
| | **மொத்தம்** | **35.00** | **7.00** | **28.00** |

மேற்கண்டவாறு, பூங்கா அமைக்கும் பணியை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-23 மற்றும் அம்ரூத் 2.0 (AMRUT) திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண் .7357/2022 இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 415 நாள்.29.12.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.20**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கொல்லப்பட்டு ஹவுசிங் போர்டு (A & D Type) பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதியதாக பூங்கா (Park) அமைக்கும் பணிக்கு, அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.10.2022-ன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) - 2022-23-ன் கீழ் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | KNMT நிதி ரூஇலட்சத்தில். |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.30, (வார்டு – G, சர்வே எண் 142,143,144) கொல்லப்பட்டி ஹவுசிங் போர்டு (A&D Type) பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணி | 42.00 | 42.00 |
| | **மொத்தம்** | **42.00** | **42.00** |

மேற்கண்டவாறு, பூங்கா அமைக்கும் பணியை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-23-ன் கீழ் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>கோப்பு எண் .7358/2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 416 நாள்.29.12.2022.</u>**

பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.21**

அரசாணை எண் ,71. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்13.09.2021.-ன்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27519-54/2021/P2, நாள்.04.11.2022-ன்படியும், கீழ்கண்ட பணியை நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் (33%) மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | நமக்கு நாமே திட்ட நிதி (NNT Share) | பொதுமக்கள் பங்களிப்பு (Public Contribution) ரூ. | பொதுமக்கள் பங்களிப்பு செலுத்திய விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.07, நடுக்காடு முனியப்பன் கோவில் முதல் சீத்தாராம்பாளையம் அருந்ததியர் தெரு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி (054007R188) | ரூ.30.00 இலட்சம் | ரூ.20.00 இலட்சம் | ரூ.10.00 இலட்சம் | ஊர் பொதுமக்கள் முனியப்பன் கோவில் தோட்டம் மற்றும் பனங்காடு தோட்டம் ஆகியோர் பங்களிப்பு தொகை ரூ.10.00 இலட்சத்தை நகராட்சி கருவூலத்தில் இரசீது எண்.054/01/1/22-23/0011651, நாள்.12.10.2022 மற்றும் இரசீது எண்.054/01/1/22-23/0012368, நாள்.19.10.2022-ல் செலுத்தியுள்ளனர். |

மேற்கண்டவாறு, நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>கோப்பு எண் .3035/2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 417 நாள்.29.12.2022.</u>**

பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.22**

அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021-ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27519-55/2022/P2, நாள்.17.11.2022-ன்படியும் கீழ்கண்ட பணியை நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் (33%) மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது :-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | நமக்கு நாமே திட்டம் 2021-2022 நிதி | பொதுமக்கள் பங்களிப்பு | பங்களிப்பு செலுத்தியவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்0.4, எட்டிமடைப்புதூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணி | ரூ.6.70 இலட்சம் | ரூ.4.47 | ரூ.2.23 இலட்சம் | திரு.T.N.ரமேஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் T.A.நாகராஜன். |

மேற்கண்டவாறு, நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.3035/2022/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 418 நாள்.29.12.2022.**

பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.23**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, நாகர்பள்ளம், சின்னப்பாவடி, மாரியம்மன் கோவில் தெரு, 5 ரோடு அழகு முத்துமாரியம்மன் கோவில் தெரு மற்றும் வார்டு எண்.26, சின்னமாரியம்மன் கோவில் தெரு முதல் நரிப்பள்ளம் OHT வரை மற்றும் வார்டு எண்.30, கொல்லப்பட்டி அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு ஆழ்துளை கிணறு நீர் விநியோகம் செய்ய போதிய குடிநீர் குழாய் வசதி இல்லாததால் மிகவும் சிரமமத்திற்கு ஆளாகின்றனர். இது தொடர்பாக நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்ந்து வழியுறுத்தியதன்படி, மேற்கண்ட இடங்களில் புதியதாக HDPE பைப் மற்றும் GI பைப்லைன் அமைக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-த்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் .7603/2022இ/1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 419 நாள்.29.12.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.24**

திருச்செங்கோடு நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கு 1 எண்ணிக்கையிலான மகேந்திரா ஸ்கார்பியோ (SCORPIO) வாகனமும், நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் அலுவலர்கள் பயன்பாட்டிற்காக 3 எண்ணிக்கையிலான மகேந்திரா பொலிரோ (BOLERO) வாகனமும் கடந்த ஆகஸ்ட் 2022 மாதம் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில், மகேந்திரா நிறுவனத்தின் கடிதத்தில், மேற்கண்ட 4 வாகனத்திற்கும் உண்டான உதரிபாகங்களுக்கு 01.08.2022 முதல் 25.08.2026 வரை நான்கு ஆண்டுகளுக்கு கூடுதல் கவச உத்தரவாதம் (Shield Warranty) பெறுவதற்கு கீழ்கண்டவாறு தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | வாகனத்தின் பெயர் | எண்ணிக்கை | உத்தரவாதம் பெற செலுத்த வேண்டியத் தொகை | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | மகேந்திரா ஸ்கார்பியோ | 1 எண்ணம் | ரூ.17345/- ஒரு வண்டிக்கு | ரூ.17345/- |
| 2 | மகேந்திரா பொலிரோ | 3 எண்ணம் | ரூ.8967/- ஒரு வண்டிக்கு | ரூ.26901/- |
| | | | **மொத்தம்** | **ரூ.44246/-** |

மேற்கண்டவாறு உத்திரவாத தொகை (Shield Warranty) செலுத்தும் பட்சத்தில் 4 ஆண்டுகளுக்கு வண்டியின் முக்கிய பாகங்களில் ஏற்படும் பழுதுகளுக்கு சிறப்பு உத்தரவாதம் கிடைக்கும் என்பதாலும், இதனால் வண்டியின் பராமரிப்பு செலவுகள் குறையும் என்பதாலும் மேற்கண்ட தொகை ரூ.44246/-ஐ மகேந்திரா நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று மகேந்திரா நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண்.2267/2022இ/1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 420 நாள்.29.12.2022.**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது,

பொருள் எண்.25

திருச்செங்கோடு நகராட்சி புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ.83.85 கோடி செலவில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு கடந்த 12.10.2022-இல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புள்ளாகவுண்டம்பட்டி காவேரி ஆற்றின் கரையில் இருந்து குடிநீர் எடுக்கப்பட்டு வைகுந்தம்பாளையத்தில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு சந்தைபேட்டை நீருந்து நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு 18 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி திட்டத்திலிருந்து நாள் ஒன்றுக்கு தற்போது 10.51 மில்லியன் லிட்டர், இடைநிலையில் 2035-ம் ஆண்டில் 14.31 மில்லியன் லிட்டர் குடிநீர் பெற வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் பெறப்பட்டு வருகின்றது. மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் நிறைவடைந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஓராண்டு காலம் சோதனை ஓட்டம் நடைபெற்று வந்தது. தற்போது மேற்படி சோதனை ஓட்ட காலம் முடிவடைந்து திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள அரசு வழிகாட்டுதலின்படி, கீழ்கண்ட விவரப்படி பணியாளர்கள் அமர்த்தப்பட வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு : -

1. <u>நீரேற்று நிலையம்</u>
    1. மின் பணியாளர்கள் C சான்று உள்ளவர் - 1 நபர்
    2. மின் பணியாளர்கள் B சான்று உள்ளவர் - 2 நபர்
    3. பராமரிப்பு பணியாளர்கள் - 3 நபர்
2. <u>குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்</u>
    1. மின் பணியாளர்கள் B சான்று உள்ளவர் - 3 நபர்
    2. பராமரிப்பு பணியாளர்கள் - 3 நபர்
3. <u>வடிகட்டி படுகை பில்டர் பெட்</u>
    1. வடிகட்டி படுகை இயக்குபவர் - 3 நபர்
4. <u>சுத்த நீரேற்று நிலையம்</u>
    1. மின் பணியாளர்கள் B சான்று உள்ளவர் - 3 நபர்
    2. பராமரிப்பு பணியாளர்கள் - 3 நபர்

ஆகியோர்களை அமர்த்தி இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கான உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 | மின் பணியாளர்கள் C சான்று உள்ளவர் | 1 | x 365 x 910.16 = 332208.40 |
| 2 | மின் பணியாளர்கள் B சான்று உள்ளவர் | 8 | x 365 x 904.10 = 2639972.00 |
| 3 | வடிகட்டி படுகை இயக்குபவர் | 3 | x 365 x 930.00 = 1018350.00 |
| 4 | பராமரிப்பு பணியாளர்கள் | 9 | x 365 x 718.45 = 2360108.25 |
| 5 | லேப் அசிஸ்டண்ட் | 1 | x 365 x 935.81 = 341570.65 |
| | | | **ஆக மொத்தம் = 6692209.30** |

இந்த புதிய திட்டத்திற்கு முழுமையான புதிய ஆட்கள் வெளி முகமை மூலமாக அமர்த்தி இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளவும், மேற்படி ரூ.67,00,000/- ஆண்டு ஒன்றிக்கான செலவினத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோரி பணி மேற்கொள்ளலாம்.

**<u>கோப்பு எண்.7829/2022/இ2</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 421 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.26**

அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்.13.09.2021-ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27519-54/2021/P2, நாள்.04.11.2022-ன்படியும் கீழ்கண்ட பணிகளை நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 25.11.2022 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் Online-இல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid கூராய்வு செய்யப்பட்டு, Price Bid திறக்க அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 25.11.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட – வார்டு எண் ,07 .நடுக்காடு முனியப்பன் கோவில் முதல் சீத்தாராம்பாளையம் அருந்ததியர் தெரு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் (054007R188) அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.30.00 இலட்சம் | 1. M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு<br>2. M/s துரை கான்ட்ராக்டர்ஸ், நாமக்கல். | மதிப்பீட்டை விட (-)0.14 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.53 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிக் கோரிய M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.14% குறைவாக கொடுத்துள்ள M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்.3035/2022/இ1-**

**நகர்மன்ற தீர்மானம் எண். 422 நாள்.29.12.2022.**

மதிப்பீட்டை விட0.(-)14% குறைவாக கொடுத்துள்ள M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.27**

அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 21.10.2022-இல் ரூ.35.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணியை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-2023-திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 25.11.2022 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் Online-இல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid கூராய்வு செய்யப்பட்டு, Price Bid திறக்க அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 25.11.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.32, (வார்டு – G, சர்வே எண்132,133) கொல்லப்பட்டி ஹவுசிங் போர்டு (A&D Type) பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.35.00 இலட்சம் | 1. திரு.எம்.பூபதி திருச்செங்கோடு<br>2. M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (-)0.11 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.50 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிக் கோரிய திரு.எம்.பூபதி, திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.11% குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.பூபதி, திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண் .7357/2022/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 423 நாள்.29.12.2022.**

மதிப்பீட்டை விட(-)0.11% குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.பூபதி, திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.28**

அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 21.10.2022-இல் ரூ.30.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணியை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-2023-திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதியும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அதன்படி, 22.11.2022 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் Online-இல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid கூராய்வு செய்யப்பட்டு, Price Bid திறக்க அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 23.11.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.30, (வார்டு – G, சர்வே எண்142,143,144) கொல்லப்பட்டி ஹவுசிங் போர்டு (A&D Type) பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.42.00 இலட்சம் | 1. M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு<br>2. M/s Sri Jaya Balaaji Builders, ஈரோடு. | மதிப்பீட்டை விட (-)0.11 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.51 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிக் கோரிய M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.11% குறைவாக கொடுத்துள்ள M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண் .7358/2022/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 424 நாள்.29.12.2022.**

மதிப்பீட்டை விட0.(-)11% குறைவாக கொடுத்துள்ள M/s Plus max Infrastrucure Pvt ltd, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.29**

நகர்மன்ற தீர்மானம் எண்.222, நாள்.28.06.2022-இன்படி ரூ.9,90,000/-திற்கு கீழ்கண்ட பணியை குடிநீர் நிதி 2021-22-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 25.11.2022 அன்று நடைப்பெற்ற மூன்றாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான ஆவத்திப்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் சந்தைப்பேட்டை நீருந்து நிலையம் மற்றும் வைகுந்தம்பாளையம் சுத்திகரிப்பு நிலையங்களில் குடிநீர் சுத்திகரிப்பு குளோரின் சிலிண்டர்கள் (Chlorine 99.8% Moisture, Na2, 03, Hydrogen and Carbon dioxide are to be nil) வாங்கி பொருத்தும் பணிகள்<br>**மதிப்பீடு ரூ.9.90 இலட்சம்** | 1. M/s Shivaalik Rathinam Chemicals, ஈரோடு<br><br>2. M/s Jupiter Enterprises, ஈரோடு. | மதிப்பீட்டை விட (-)0.10 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட (+)0.14 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.10% குறைவாக கொடுத்துள்ள M/s Shivaalik Rathinam Chemicals, ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**கோப்பு எண்.4361/2022/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 425 நாள்.29.12.2022.**

மதிப்பீட்டை விட(-)0.10% குறைவாக கொடுத்துள்ள M/s Shivaalik Rathinam Chemicals, ஈரோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.30**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19,20, வேளாளர் காலனி தெரு எண்.1, முதல் கூட்டப்பள்ளி பேருந்து நிறுத்தம் வரை CMRDP திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் இருபுறமும் மழைநீர் வடிகால் அமைத்து சாலை விரிவாக்கப்பணிகள் நடைபெற்று வருவதால், இப்பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் முற்றிலும் சேதமடைந்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாத நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் புதியதாக HDPE குடிநீர் பகிர்மானக் குழாய்கள் உடனடியாக அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,80,000/-த்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.7834/2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 426 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.31**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, பழைய சேலம் ரோடு மற்றும் பாவடித் தெரு சந்திப்பில் உள்ள சிறுபாலம் (Culvert) பழுதடைந்துள்ளதால் இதனை உடனடியாக சரிசெய்யக்கோரி அப்பகுதி பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட சிறுபாலத்தின் சிலாப் (Slab) மற்றும் பக்கவாட்டு சுவர்கள் (Retaining Wall) பழுதடைந்து உள்ளதை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலம் (Culvert) அமைக்க ஆகும் செலவினம் ரூ.1,40,000/-த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.7830/2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 427 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**.பொருள் எண்.32**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, நரிபள்ளம் அம்பேத்கர் சிலை அருகில் மற்றும் பொதுக்கழிப்பிடம் அருகில் உள்ள இரண்டு சிறுபாலங்கள் (Culvert) முற்றிலும் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இதுதொடர்பாக இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், மேற்கண்ட பகுதியில் உள்ள இரண்டு சிறுபாலங்களை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,60,000/-த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 7832/2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 428 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.33**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, பழனியாண்டவர் கோவில் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (MLA Fund) கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே உள்ள பழைய குடிநீர் பகிர்மான குழாய்கள் உடைந்து பழுதுகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் புதியதாக HDPE குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-த்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.7833 /2022இ/1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 429 நாள்.29.12.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.34**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2922/2019/அ1, நாள்.02.11.2022-ன்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநராக, சேலம் அலுவலக பயன்பாட்டிற்கு / கணினியும் மற்றும் / பிரிண்டரும் வாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, கீழ்கண்ட கணினி மற்றும் பிரிண்டர் அரசு அங்கீகாரம் பெற்ற GEM விலையில் வாங்கி வழங்க கீழ்கண்ட விவரப்படி:-

| | | | |
|---|---|---|---|
| 1 | DELL DESKTOP CORE I3, 8GB RAM 52GB SSD, 20"LED MONTIOR, WIF5, KEYBOARD, MOUSE, WINDOWS" | 1 எண்ணிக்கை | ரூ.56995/- |
| 2 | Cannon LBP 2900 Laser Printer | 1 எண்ணிக்கை | ரூ.20,200 |
| | | **மொத்தம்** | **ரூ.77,195/-** |

மேற்கண்டவாறு / கணினி மற்றும் / பிரிண்டர் ஆகியவற்றை அரசு அங்கீகரித்த விலையான (GEM) ரூ.77195/- விலையில் M/s Spyder Technology, Salem நிறுவனம் மூலம் வாங்கி வழங்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அரசு அங்கீகரித்த GEM விலையில், M/s Spyder Technology, Salem நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.7407/2022இ/1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 430 நாள்.29.12.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.35**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, சீத்தாராம்பாளையம் மாரியம்மன் கோவில் எதிரில் உள்ள திறந்த வெளிகிணறு, வார்டு எண்.19, ஜீவா நகரில் உள்ள திறந்த வெளிகிணறு, வார்டு எண்.15, மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள திறந்த வெளிகிணறு மற்றும் வார்டு எண்.16-ல் சின்ன பாலூத்து சந்தில் உள்ள திறந்த வெளி கிணறு ஆகியவை திறந்தவெளியில் உள்ளதால் மிகவும் ஆபத்தாக உள்ளதாக தெரிவித்து இரும்பு கம்பிக்கொண்டு மூடி பாதுகாத்திட அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். மேலும், சாலை ஓர கிணறுகளை பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் சாலை பாதுகாப்பு தொடர்பான ஆய்வு கூட்டத்திலும் மற்றும் விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் திருச்செங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் கோரிவுள்ளார். இதுதொடர்பாக, மேற்கண்ட திறந்த வெளி கிணறுகள் நேரில் ஆய்வு செய்யப்பட்டத்தில், கிணறுகள் அனைத்தும் திறந்த வெளியில் ஆபத்தான நிலையில் உள்ளதால் இதனை இரும்பு கம்பிக்கொண்டு மூடி அமைத்து பாதுகாக்க (Iron Grill Door) ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/-த்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 7835 /2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 431 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.36**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.19009/2022/SBM-1, நாள்.25.11.2022-ன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் உள்ள 35381 cum பழைய தேக்கத் திடக்கழிவுகளை (Legacy Waste) பயோ-மைனிங் (Bio Mining) முறையில் அகற்ற ரூ.231.00 இலட்சம் மதிப்பீட்டில் தூய்மை பாரத இயக்கம் 2.0 (SBM 2.0) திட்டத்தின் கீழ் மேற்கொள்ள கீழ்கண்டவறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | SBM 2.0 மத்திய அரசு நிதி (GOI Share 50%) | SBM 2.0 மாநில அரசு நிதி (GOI Share 33%) | நகராட்சி நிதி (ULB Share 17%) |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் உள்ள 35381cum பழைய தேக்கத் திடக்கழிவுகளை பயோ-மைனிங் முறையில் அகற்றும் பணி | ரூ.231.00 இலட்சம் | ரூ.115.50 இலட்சம் | ரூ.76.23 இலட்சம் | ரூ.39.27 இலட்சம் |

மேற்கண்டவாறு நிதி பங்கீட்டின்படி பணிகள் மேற்கொள்ளவும், உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கேரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு SBM 2.0 திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதி -50% மாநில அரசு நிதி -33% நகராட்சி பங்குத் தொகை -17% என்ற நிதி பங்கீட்டில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான நகராட்சி பங்குத் தொகை ரூ.39.27 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர், அவர்களின் முன் அனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி பெற விரிவான திட்ட மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>கோப்பு எண்.3821/2021இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 432 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.37**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் 4 நுண்உர செயலாக்க கூடத்தில் (MCC) குப்பைகளை அறைக்க பயன்படுத்தப்பட்டு வரும் மின்மோட்டார்கள் மும்முனை இணைப்பில் இயக்கி வரும் நிலையில் மின் விநியோக வேறுபாடு காரணமாக அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. மேலும், அம்மா உணவகத்தின் உள்ள பாய்லர் பழுது காரணமாக சமையல் செய்வது தாமதமாகிறது. எனவே, மேற்கண்ட 4 நுண்உர செயலாக்க கூடத்தில் மின் விநியோக வேறுபாடு காரணமாக அடிக்கடி ஏற்படும் மின்மோட்டார் பழுதுகளை சரிசெய்ய புதியதாக பேனல் போர்டு மாற்றி அமைக்கவும் மற்றும் அம்மா உணவகத்தில் உள்ள பாய்லர் பழுதை சரி செய்யவும் ஆகும் செலவினம் ரூ.1,70,000/-த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 433 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.38**

அரசாணை எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022-இன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண் சாலையை புதியதாக தார்சாலை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து மேம்படுத்தும் பணி மதிப்பீடு ரூ.632.09 இலட்சத்திற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23-இன் கீழ் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

| S.No | Serial No as per GoNo.23 | | | Ward No | Name of the Road | Unicode | BT Road | | Drain | Culvert | Total Amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Road | Drain | Culvet | | | | Length in M | Width | length IN M | Nos | |
| **Package – I** | | | | | | | | | | | |
| 1 | 23 | 5 | 4 | 1 | Kollumedu Cross street no.2 | 054001RO34 | 70.00 | 5.00 | - | - | 18925000.00 |
| 2 | | | | | Kollumedu street no.1 to East side road | 054001RO35 | 25.00 | 5.00 | 25.00 | 1 | |
| 3 | | | | | Palani Andavar Kovil thottom to Chandranagar road | 054001RO38 | 495.00 | 5.00 | 180.00 | 1 | |
| 4 | 24 | | | 2 | Muniyappankovil to Panagadu Cross road | 054002R055 | 286.00 | 5.00 | - | - | |
| 5 | | | | | Pananthoppu Kuravankadu Road | 054002R068 | 155.00 | 5.00 | - | - | |
| 6 | 25 | 6 | 5 | 3 | Karungal Kadu Main road | 054003R095 | 350.00 | 5.00 | 350.00 | 2 | |
| 7 | | | | | Amman Nagar To Bakthavachalam Nagar Road | 054003R105 | 285.00 | 5.00 | - | - | |
| 8 | 26 | 7 | 6 | 5 | Nesavallar Colony to Kozhikalnatham road | 054005R149 | 140.00 | 4.30 | 140.00 | 2 | |
| **Package – II** | | | | | | | | | | | |
| 9 | 27 | 8 | 7 | 8 | Lakshminagar Cross Road-1 | 054008R204 | 396.00 | 5.00 | 200.00 | 3 | 16335000.00 |
| 10 | 28 | 9 | | 9 | Sellammankadu Road to Odakadu | 054009R246 | 104.00 | 5.00 | - | - | |
| 11 | | | | | Sellammangadu Main road to West road | 054009R249 | 125.00 | 5.00 | 125.00 | - | |
| 12 | 29 | 10 | 8 | 12 | Irattai puliyamaram santhu to Ambedkarnagar Cross road-1 | 054012R323 | 233.00 | 5.00 | 180.00 | 1 | |
| 13 | | | | | Irattai puliyamaram santhu to Ambedkarnagar Cross road-2 | 054012R324 | 150.00 | 5.00 | - | - | |
| 14 | 30 | 11 | 9 | 13 | Ambedkarnagar cross road to Mariyamman Kovil Road | 054013R354 | 220 | 5.00 | 220.00 | 2 | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | | | | | Omganapathinaidu Street Road | 054013R357 | 120 | 5.00 | - | - | |
| 16 | 31 | | | 14 | Kuditheru to Mariyamman kovil cross road-1 | 054014R370 | 156.00 | 4.60 | - | - | |
| **Package –III** | | | | | | | | | | | |
| 17 | 32 | 12 | 10 | 18 | Kattuvalavu Road | 054018R452 | 308.00 | 4.90 | 200.00 | 1 | 15801000.00 |
| 18 | | | | | Masaniyamman South side Road | 054018R458 | 80.00 | 5.00 | - | - | |
| 19 | | | | | Suriyampalayam street No.8 | 054018R463 | 98.00 | 4.10 | - | - | |
| 20 | 33 | 13 | 11 | 19 | Koottapalli Busstop to Kuditheru Cross Road | 054019R514 | 362.00 | 5.00 | 362.00 | 4 | |
| 21 | 34 | 14 | 12 | 20 | Manakkadu to Cross road D.no:72 | 054020R520 | 150.00 | 5.00 | 150.00 | 2 | |
| 22 | 35 | | | 22 | Bankers colony road 3 | 054022R611 | 180.00 | 4.90 | - | - | |
| 23 | 36 | | | 23 | Sanarpalayam Road 1 | 054023R616 | 150.00 | 4.60 | - | - | |
| 24 | 37 | | | 28 | Oothukkadu cross Road | 054028R683 | 150.00 | 4.70 | - | - | |
| **Package – IV** | | | | | | | | | | | |
| 25 | 38 | | | 29 | Aavaran Kaadu Road 1 | 054029R727 | 130.00 | 5.00 | - | - | 12148000.00 |
| 26 | | | | | Aavaran Kaadu Road 2 | 054029R728 | 30.00 | 5.00 | - | - | |
| 27 | | | | | Aavaran Kaadu Road 3 | 054029R729 | 94.00 | 5.00 | - | - | |
| 28 | 39 | 15 | 13 | 30 | Kollapatty Cross Road 3 | 054030R738 | 90.00 | 5.00 | - | - | |
| 29 | | | | | Nehru Nagar Road-1 | 054030R747 | 92.00 | 5.00 | 92.00 | 1 | |
| 30 | | | | | Nehru Nagar Road-2 | 054030R748 | 92.00 | 5.00 | 92.00 | 1 | |
| 31 | | | | | Nehru Nagar Road-3 | 054030R749 | 75.00 | 5.00 | 72.00 | 1 | |
| 32 | 40 | | | 32 | Vellapparai main road | 054032R798 | 160.00 | 5.00 | - | - | |
| 33 | 41 | 16 | 14 | 33 | Malaisuthi Road to Karattupalayam Burial Ground | 054033R817 | 250.00 | 5.00 | 250.00 | 1 | |
| | | | | | | **Total** | 5801.00 | 5M | 2638.00 | 23 | |
| | | | | | | | | | | **Total** | 6320900.00 |

மேற்கண்டவாறு, சாலை அமைக்கும் பணியை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-23 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>கோப்பு எண்.8035/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 434 நாள்.29.12.2022.</u>**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.39**

அரசாணை எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022-இன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட சந்தைபேட்டையில் உள்ள வாரச்சந்தையை மேம்படுத்தும் பணி மதிப்பீடு ரூ.431.00 இலட்சத்திற்கும் மற்றும் வாரச்சந்தை அருகில் புதியதாக கடைகள் கட்டும் பணி மதிப்பீடு ரூ.306.00 இலட்சத்திற்கும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23-இன் கீழ் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில். | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட நிதி ரூஇலட்சத்தில். | நகராட்சி பங்குத்தொகை ரூஇலட்சத்தில். |
|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி சந்தைப்பேட்டை பகுதியில் உள்ள வாரச் சந்தையை (வார்டு-Eநகர புல ,19-பிளாக் , 2/52.எண்) மேம்படுத்துதல் | 431.00 | 301.70 | 129.30 |
| 2 | திருச்செங்கோடு நகராட்சி சந்தைப்பேட்டை பகுதியில் உள்ள வாரச் சந்தை அருகில் புதியதாக கடைகள் கட்டுதல் | 306.00 | 153.00 | 153.00 |
| | **மொத்தம்** | **737.00** | **454.70** | **282.30** |

மேற்கண்ட மதிப்பீட்டில் மொத்த நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.282.30 இலட்சத்தினை தற்போது புதியதாக கட்டப்படவுள்ள வாரசந்தை ஆண்டு குத்தகை இனத்திற்கு செலுத்த வேண்டிய முன் பணத்தொகை மற்றும் ஆண்டு குத்தகை வருமானம் சேர்த்து ரூ.40.00 இலட்சமும், புதியதாக கட்டப்படவுள்ள 23 தரைத்தளக் கடைகளுக்கு வைப்பு தொகையாக தலா ரூ.2.50 இலட்சமும், 20 முதல் தள கடைகளுக்கு வைப்புத்தொகை தலா ரூ.1.50 இலட்சம் மற்றும் 25 மண்டிக்கடைகளுக்கு வைப்புத்தொகை தலா ரூ.1.50 இலட்சம் நிர்ணயம் செய்து இதன் மூலம் ரூ.131.00 இலட்சமும் மற்றும் புதியதாக கட்டப்படவுள்ள 20 தரைத்தளக்கடைகள், 23 முதல் தள கடைகள் மற்றும் 25 மண்டி கடைகளின் மூலம் முன் வாடகை பணம் ரூ.68.00 இலட்சம் கிடைக்கபெறும், ஆக மொத்தம் வாரசந்தை குத்தகை, கடை வாடகை வைப்புத்தொகை மற்றும் முன் வாடகை பணம் மூலம் ரூ.239.00 இலட்சமும் மற்றும் மீத தொகை ரூ.51.00 இலட்சத்தை 2022 -23 ஆம் ஆண்டின் சொத்துவரி சீராய்வு உயர்வினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக கிடைக்கும் வருவாயில் இருந்து பெற்று நகராட்சி பங்கு தொகை ரூ.290.00 இலட்சத்திற்கு வருவாய் ஈட்டப்படும்.

எனவே, மேற்கண்ட வருமானங்களின் மூலம் நகராட்சி பங்களிப்புத் தொகையினை முழுவதுமாக ஈடு செய்து கொள்ளவும் மற்றும் மேற்கண்ட நிதி பங்கீட்டின்படி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் உரிய தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு KNMT திட்டத்தின் கீழ் திட்ட நிதி – ரூ.524.70 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.282.30 இலட்சம் என்ற நிதி பங்கீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான நகராட்சி பங்குத் தொகை ரூ.282.30 இலட்சத்தை புதியதாக அமைக்கப்படவுள்ள வாரசந்தை ஆண்டு குத்தகை முன் பணம் மற்றும் வைப்பு தொகையில் இருந்து கிடைக்கும் வருவாய், புதியதாக அமைக்கப்படவுள்ள கடைகளின் வாடகை வைப்புத் தொகை மற்றும் முன் வாடகை தொகையில் இருந்து கிடைக்கும் வருவாய் மற்றும் 2022 -23 ஆம் ஆண்டின் சொத்துவரி சீராய்வு உயர்வினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக கிடைக்கும் வருவாய் ஆகியவற்றில் இருந்து ஈடுசெய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர், அவர்களின் முன் அனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி பெற விரிவான திட்ட மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண். 2750/2022/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 435 நாள்.29.12.2022.**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.40**

4வது மாநில உயர்மட்டக்குழு கூட்ட நடவடிக்கைகள் நாள்.09.11.2022-ன்படி, திருச்செங்கோடு நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் (SBM) 2.0 திட்டத்தின் கீழ் 10டன் (5x2) அளவில் இரண்டு இடங்களில் வளம் மீட்பு மையம் (Material Recovery Facilities MRF) அமைக்க கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | பணியின் பெயர் | மொத்த அளவு | மொத்த மதிப்பீடு | மாத்திய அரசு நிதி (GOI Share 50%) | மாநில அரசு நிதி (GOI Share 33%) | நகராட்சி பங்குத்தொகை (ULB Share 17%) |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சியில் இரண்டு இடங்களில் வளம் மீட்பு மையம் (Material Recovery Facilities MRF) அமைத்தல் | 10 மெ.டன் | ரூ.85.00 இலட்சம் | ரூ.42.50 இலட்சம் | ரூ.28.05 இலட்சம் | ரூ.14.45 இலட்சம் |

அதன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் காலனி நுண் உரச்செயலாக்ககூடம் (MCC) அருகில் மற்றும் சாணார்பாளையம் நுண் உரச்செயலாக்ககூடம் (MCC) அருகில் ஆகிய இரு இடங்களில் புதியதாக வளம் மீட்பு மையம் அமைக்கவும் மற்றும் மேற்கண்ட நிதி பங்கீட்டின்படி பணிகள் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற பிரேரணைகள் மற்றும் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட நிதி பங்கீட்டின்படி பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி பங்குத் தொகை (17%) ரூ.14.45 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர், அவர்களின் முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற பிரேரணைகள் மற்றும் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டத்தை மன்றம் அங்கீகரிக்காலம்.

**<u>கோப்பு எண். 8034/2022இ/1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 436 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.41**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27519-55/2021/P2, நாள்.17.11.2022-ன்படி, வார்டு எண்0.4 ,எட்டிமடைப்புதூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியை ரூ.6.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற மண் பரிசோதனை (Soil test ) அவசியம் செய்ய வேண்டியுள்ளதால், அரசு பொறியியல் கல்லூரி, சேலம் மண் பரிசோதனை செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்காலம்.

**<u>கோப்பு எண் .3035/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 437 நாள்.29.12.2022.</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.42**

திருச்செங்கோடு நகராட்சி நாமக்கல் மாவட்டத்தில் 25.20 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 33 வார்டுகளை உள்ளடக்கிய தேர்வு நிலை நகராட்சியாகும். 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 95,335, தற்போதைய மக்கள் தொகை 1,09,944 ஆகும். மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 37875 வணிக நிறுவனங்கள் எண்ணிக்கை 3786 மற்றும் தொழிற்சாலை எண்ணிக்கை 1049 ஆகும். இவற்றில் வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகள் 18479 மற்றும் வணிக பயன்பாட்டு குடிநீர் இணைப்புகள் 277 ஆகும்.

திருச்செங்கோடு நகராட்சியில் கீழ்கண்ட திட்டங்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது:-

1). திருச்செங்கோடு நகரிலிருந்து 18 கி.மீ தொலைவில் உள்ள ஆவத்திபாளையத்தில் இருந்து காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு "திருச்செங்கோடு, ஆலாம்பாளையம் மற்றும் 102 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம்" தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 1993-ம் ஆண்டு முதல் கட்டணம் செலுத்தி தினமும் 2.50 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே பெறப்பட்டு வந்தது.

2). இந்நிலையில், இந்நகராட்சிக்கு இரண்டாவது குடிநீர் திட்டமான "பொன்விழா ஆண்டு குடிநீர் திட்டம்" திருச்செங்கோடு நகராட்சிக்கென பிரத்யேகமாக அனுமதிக்கப்பட்டு, இந்நகரிலிருந்து 18 கி.மீ தொலைவில் உள்ள ஆவத்திபாளையத்தில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு தினமும் 12.00 மில்லியன் லிட்டர் (Capacity) குடிநீர் நீரேற்றம் செய்யும் திறனில் 2003-ம் ஆண்டு கட்டப்பட்டு தற்போது தினமும் 6.00 முதல் 7.00 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு குடிநீர் திட்டங்கள் மூலம் தினமும் பெறப்பட்டு வந்த 9.50 மில்லியன் லிட்டர் குடிநீர், நகரப்பகுதி விரிவாக்கத்தாலும், மக்கள் தொகை பெருக்கத்தினாலும் பற்றாக்குறை ஏற்பட்டது.

3). இச்சூழ்நிலையில், காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு மூன்றாவதாக குடிநீர் திட்டமான "புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் திட்டம்" திருச்செங்கோடு நகராட்சிக்கென பிரத்யேகமாக அனுமதிக்கப்பட்டது. இது திருச்செங்கோடு நகரிலிருந்து 33.50 கி.மீ தொலைவில் புள்ளாகவுண்டம்பட்டியில் நீரேற்று நிலையம் அமைத்து வைகுந்தம்பாளையத்தில் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு 110 குதிரைதிறன் கொண்ட சுத்த நீரேற்று மின் மோட்டார் மூலமாக தினமும் 14.60 மில்லியன் லிட்டர் (Capacity) குடிநீர் நீரேற்றம் செய்யும் திறனில் கட்டப்பட்டு, தற்போது 9.00 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. இத்திட்டம் 31.12.2020-ல் முடிவுற்றப்பின், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஓராண்டு பராமரிப்பு காலம் 30.06.2022-இல் முடிவுற்று, 12.10.2022 அன்று இத்திட்டம் திருச்செங்கோடு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

திருச்செங்கோடு, ஆலாம்பாளையம் மற்றும் 102 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து கட்டணம் செலுத்தி பெறப்பட்டு வந்த குடிநீர், புள்ளாகவுண்டம்பட்டி புதிய குடிநீர் திட்டம் முடிவடைந்து செயல்பாட்டிற்கு வந்த பிறகு, கடந்த ஜீன் 2021 முதல் நிறுத்தப்பட்டது.

தற்போது "பொன்விழா ஆண்டு குடிநீர் திட்டம்" மற்றும் "புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் திட்டம்" ஆகிய இரு சொந்த ஆதார குடிநீர் திட்டங்கள் மூலம் திருச்செங்கோடு நகராட்சிக்கென குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் செயல்படுத்த ஓராண்டிற்கு கீழ்கண்டவாறு தொடர் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:-

**அ). ஆவத்திபாளையம்:-** **ரூ. கோடியில்**

| வ. எண் | செலவினம் | ஆவத்திபாளையம் தலைமை நீரேற்று நிலையம் | கருமகவுண்டம் பாளையம் நீருந்து நிலையம் | சந்தைப்பேட்டை நீருந்து நிலையம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | உயர்மின் அழுத்த இணைப்பிற்கான மின் கட்டணம் | 2.20 | 1.54 | 0.90 | 4.64 |
| 2 | சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தப்படும் குளோரின் மற்றும் ஆலம் வேதிப் பொருள் | 0.10 | - | 0.10 | 0.20 |
| 3 | பணியாளர்களின் ஊதியம் | | | 0.83 | 0.83 |
| 4 | குடிநீர் பிரதான குழாய், மின்மோட்டார் மற்றும் இதர உபகரணங்க ளுக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | | | 0.85 | 0.85 |
| | | | | **மொத்த செலவினம்** | **6.52** |

**ஆ). புள்ளாகவுண்டம்பட்டி:-**

**ரூ. கோடியில்**

| வ. எண் | செலவினம் | புள்ளாகவுண்டம்பட்டி நீரேற்று நிலையம் | வைகுந்தம்பாளையம் சுத்திகரிப்பு நிலையம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | உயர்மின் அழுத்த இணைப்பிற்கான மின் கட்டணம் | 1.43 | 1.76 | 3.19 |
| 2 | சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தப்படும் குளோரின் மற்றும் ஆலம் வேதிப் பொருள் | - | 0.10 | 0.10 |
| 3 | பணியாளர்களின் ஊதியம் | | 2.55 (வெளிகொணர்வு) | 2.55 |

| | | | |
|---|---|---|---|
| 4 | குடிநீர் பிரதான குழாய், மின்மோட்டார் மற்றும் இதர உபகரணங்களுக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | 0.30 | 0.30 |
| | | **மொத்த செலவினம்** | **6.14** |

மேற்கண்ட, இரு குடிநீர் திட்டங்களுக்கும் இயக்கம் மற்றும் பராமரிப்பு என தொடர் செலவினம் ரூ.12.66 கோடிஆண்டு தோறும் செலவாகிறது. ஆனால், நகராட்சியின் குடிநீர் நிதியின் கீழ் மொத்த ஆண்டு வருவாய் ரூ.4.70 **கோடி**மட்டுமே கிடைக்கிறது. எனவே, வரவு செலவு கணக்கீட்டின்படி ஆண்டு ஒன்றுக்கு பற்றாக்குறை ரூ.7.96 **கோடி** ஏற்படுகிறது.

2004-ஆம் ஆண்டிற்கு பின் 18 ஆண்டுகளாக குடிநீர் கட்டணம் மாற்றியமைத்து நிதிநிலையை சரிசெய்யாததால் நிதி சுமை ஏற்பட்டு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டணம் ரூ.18.00 **கோடி** மற்றும் குடிநீர் திட்ட பணிகளுக்காக அரசுக்கு செலுத்த வேண்டிய நகராட்சி கடன் ரூ.8.41 கோடி திருப்பி செலுத்தாமல் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. மின்கட்டண நிலுவை தொடர்பாக மின்வாரியம் தொடர்ந்து மின்கட்டணத்தை செலுத்தக்கோரியும், செலுத்தாத மின்கட்டணத்திற்கு தண்ட கட்டணமும் (Penalty) விதிக்கப்பட்டு வருகிறது. இதனால், எந்த நேரத்திலும் மின் வாரியத்தால் மின் இணைப்பை துண்டிப்பு செய்ய வாய்ப்புள்ளது. அவ்வாறு செய்ய நேர்ந்தால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வரும் குடிநீர் தடைபட நேரிட்டால், அசாதாரண சூழ்நிலை ஏற்படுவதோடு நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படக்கூடும்.

இதனை கருத்தில்கொண்டு கடந்த 2020-ஆம் ஆண்டு குடிநீர் கட்டணத்தை மாற்றி அமைக்க பொதுமக்களிடமிருந்து கருத்துகள் மற்றும் ஆலோசனை பெறப்பட்டதன் அடிப்படையில், இந்நகராட்சி தனி அலுவலர் தீர்மான எண்.349, நாள்.02.11.2020 மற்றும் நாமக்கல் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நாள்.21.01.2021-இன்படி, கீழ்கண்டவாறு குடிநீர் கட்டணத்தை மாற்றி அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது:-

| **குடிநீர் உபவிதி எண்** | **01.09.2004 முதல் தற்போதுள்ள குடிநீர் கட்டணம்** | **01.04.2021 முதல் மாற்றியமைத்த குடிநீர் கட்டணம்** |
|---|---|---|
| **12 (அ)** | வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.60/- வீதம் ( ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.6/- ) | வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.160/- (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.16/-) |
| **12 (ஆ)** | வீட்டு உபயோகம் அல்லாதது குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.180/- வீதம் ( ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.18/-) | வீட்டு உபயோகம் அல்லாதது குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.400/- வீதம் (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.40/-) |

இந்நிலையில், ஆவத்திபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பெறப்படும் குடிநீர், சாலை விரிவாக்கப் பணி மற்றும் குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், அடிக்கடி தடைப்படுவதாலும் புள்ளாகவுண்டம்பட்டி புதிய குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சோதனை ஓட்டம் செய்து திருச்செங்கோடு நகராட்சி வசம் ஒப்படைக்கப்படாமல் இருந்ததாலும், திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டணத்தினை 01.04.2021-இல் நடைமுறைப் படுத்தாமல், புதிய குடிநீர் திட்டம் ஒப்படைக்கப்படும் வரை நிலுவையில் வைக்கப்பட்டது. தற்போது, புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் திட்டம் நகராட்சி வசம் 12.10.2022 அன்று ஒப்படைக்கப்பட்டது. இதனால், தற்போது மேலே விவரிக்கப்பட்டவாறு குடிநீர் பராமரிப்பு செலவினம் அதிகரித்துள்ளதாலும், கூடுதல் பணியாளர்கள் கொண்டு ஊதியம் வழங்க வேண்டியுள்ளதாலும், தொடர்ந்து சீரான குடிநீர் வழங்கவும், 2004-ஆம் ஆண்டுக்கு பின் கிட்டதட்ட 18 ஆண்டுகளாக குடிநீர் கட்டணம் மாற்றியமைக்கப்படாமல் உள்ளது என்பதை கருத்தில் கொண்டு பொதுநலன் கருதி குடிநீர் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது.

அதன்படி, நமது நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மற்ற நகராட்சிகளில் குடிநீர் கட்டணம் தற்போது கீழ்கண்டவாறு வசூலிக்கப்பட்டு வருகிறது :-

| வ. எண் | நகராட்சியின் பெயர் | குடிநீர் கட்டணம் | |
|---|---|---|---|
| | | குடியிருப்பு உபயோகம் | வணிக உபயோகம் |
| 1 | திருச்செங்கோடு நகராட்சி | 65 | 180 |
| 2 | ராசிபுரம் நகராட்சி | 152 | 502 |
| 3 | கொமாரபாளையம் நகராட்சி | 150 | 400 |
| 4 | நாமக்கல் நகராட்சி 500 சதுர அடி வரை | 150 | 450 |
| | 501-1200 சதுர அடி வரை | 180 | 540 |
| | 1201-2400 சதுர அடி வரை | 210 | 630 |
| | 2401 சதுர அடிக்கு மேல் | 270 | 810 |

மேற்கண்ட நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மற்ற நகராட்சிகளை ஒப்பிடும் போது திருச்செங்கோடு நகராட்சியில் குடிநீர் கட்டணம் மிகவும் குறைவானதாக உள்ளது என்பது தெளிவாகிறது.

இச்சூழ்நிலையில், அதிகரித்து வரும் தொடர் செலவினங்களான மின் கட்டணம் பணியாளர் ஊதியம் மற்றும் அரசிற்கு செலுத்த வேண்டிய கடன் ஆகியவற்றை ஈடு செய்ய ஏதுவாக குடிநீர் கட்டணத்தை மாற்றியமைத்தால் மட்டுமே நிருவாக நிதி சுமை குறைத்து பொதுமக்களுக்கு போதுமானதுமான குடிநீர் சீராக விநியோகிக்கவும் இயலும். இல்லையெனில் நகராட்சியின் குடிநீர் விநியோகம் பெருமளவு எதிர்காலத்தில் பாதிக்க நேரிடும். எனவே, குடிநீர் உபவிதிகளை கீழ்கண்டவாறு திருத்தம் செய்து குடிநீர் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது:-

| குடிநீர் உபவிதி எண் | 01.09.2004 முதல் தற்போதுள்ள குடிநீர் கட்டணம் | 01.04.2023 முதல் மாற்றியமைக்க வேண்டிய குடிநீர் கட்டணம் |
|---|---|---|
| 12 (அ) | வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.60/- வீதம் ( ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.6/- ) | வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.250 /- (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.25/-) |
| 12 (ஆ) | வீட்டு உபயோகம் அல்லாதது குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.180/- வீதம் ( ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.18/-) | வீட்டு உபயோகம் அல்லாதது குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.450/- வீதம் (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.45/-) |
| 12 (இ) | தொழிற்சாலைக்களுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.180/- வீதம் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.18/-) | வீட்டு உபயோகம் அல்லாதது குடிநீர் இணைப்பு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.450/- வீதம் (ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.45/-) |

அம்ரூத்-2.0 திட்டத்தின் கீழ் மேற்கொண்டு வழங்கவேண்டிய 10175 இணைப்புகள் வழங்கப்படும் பட்சத்தில் திருச்செங்கோடு நகராட்சியின் மொத்த குடிநீர் இணைப்பு 28654 ஆக உயரும். இவ்விணைப்புகளுக்கு மாற்றியமைக்கப்படும் கட்டணத்தின்படி வசூல் செய்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.7.05 கோடி கூடுதல் வருவாய் ஈட்டலாம். இதனால் எதிர்வரும் காலத்தில் மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீரை பொதுமக்களுக்கு சீராக விநியோகிக்க இயலும்.

எனவே, மேற்கண்டவாறு மாற்றிமைக்க உத்தேசிக்கப்பட்ட குடிநீர் கட்டணம் தொடர்பான உபவிதிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து பெறப்படும் அனுமதிக்கேற்ப, பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனை பெற்று அதனடிப்படையில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து குடிநீர் கட்டணம் தொடர்பான உபவிதிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் இறுதி ஒப்புதல் பெற்று குடிநீர் கட்டணத்தை மாற்றியமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

திருச்செங்கோடு நகராட்சியில் கடந்த **18** ஆண்டுகளாக குடிநீர் கட்டணம் மாற்றியமைக்கப்படாமல் இருந்து வருவதால், குடிநீர் திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான கூடுதல் தொடர் செலவினத்தை கருதில் கொண்டும் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதை கருத்தில் கொண்டும் குடிநீர் கட்டணத்தை மாற்றியமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.12993/2002இ/2**

**நகர்மன்ற தீர்மானம் எண். 438 நாள்.29.12.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.43**

திருச்செங்கோடு நகராட்சிக்கு என புதிய குடிநீர் ஆதாயம் தோற்றுவிக்கும் பணிக்கு அரசாணை எண்.82, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.08.2018 மற்றும் அரசாணை எண். 12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.01.2019 அரசாணைகளின் படி ரூ.83.85 கோடி (ரூ.81.22 கோடி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2018-19 மற்றும் 2019-20 திட்ட பங்கு தொகை மற்றும் ரூ.2.63 கோடி நகராட்சி பங்கு தொகை) மதிப்பீட்டில் புதிய குடிநீர் அபிவிருத்தி பணிகள் ஊராட்சி கோட்டை கதவணைக்கு மேலே காவிரி ஆற்றின் கரையில் புள்ளாகவுண்டம்பட்டி கிராமத்தில் நீரேற்றும் நிலையம் அமைக்கப்பட்டு வைகுந்தம்பாளையத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு 500mm விட்டமுள்ள DI நீருந்து குழாய்கள் மூலம் புதியதாக சந்தைப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள 15.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றம் செய்யும் பணி ஆகியவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு சோதனை ஓட்டம் மற்றும் ஓராண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் முடிவடைந்து 12.10.2022-இல் திருச்செங்கோடு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

தற்போது, திருச்செங்கோடு நகராட்சியில் பொன்விழா ஆண்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 6.60 MLD குடிநீரும் மற்றும் புள்ளாகவுண்டம்பட்டி புதிய குடிநீர் திட்டத்தின் மூலம் 7.50 MLD குடிநீரும் சந்தைப்பேட்டை நீருந்து நிலையத்திலிருந்து குடிநீர் நீருந்து குழாய்கள் மூலம் 18 மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி மற்றும் 1 தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் பெரும்பாலனவை 20 வருடங்களுக்கு மேல் ஆன AC மற்றும் PSC குழாய்களாக இருப்பதால் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. மேலும், குடிநீர் குழாய்கள் பிரதான சாலைகளின் நடுவே பதிக்கப்பட்டு இருப்பதால் உடைப்புகள் சரிசெய்யவும் மிகவும் தாமதமாகிறது. மேலும், தற்போது உள்ள குடிநீர் விநியோகத்திற்கே அடிக்கடி குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் தடைப்பட்டு வரும் நிலையில் எதிர்காலத்தில் புள்ளாகவுண்டம்பட்டி புதிய குடிநீர் திட்டத்தின் மூலம் 16.60 MLD வரை பெறவேண்டியுள்ளதால், தற்போதுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை அவசியம் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

எனவே, தற்பொழுது உள்ள குடிநீர் விநியோகம் முறை போதுமானதுமாக இல்லாததால் தொடர்ந்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி புதியதாக கீழ்கண்டவாறு குடிநீர் மேம்பாட்டு பணிகள் அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளது:-

| வ.எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1 | சந்தைப்பேட்டை நீருந்து நிலையம் முதல் மலைசுத்தி ரோடு வரை மற்றும் வாலரைகேட் சந்திப்பு முதல் வாலரைகேட் மேல் நிலைத் தொட்டி வரை புதியதாக DI pipe குடிநீர் நீருந்து குழாய் -4500m நீளத்திற்கு மாற்றி அமைக்கும் பணி. |

| | |
|---|---|
| 2 | சந்தைப்பேட்டை நீருந்து நிலையம் முதல் அண்ணா பூங்கா மேல்நிலைத் தொட்டி மற்றும் பச்சியம்மன் மேல்நிலைத் தொட்டி வரை நெசவாளர் காலனி மேல்நிலைத் தொட்டி, குமரேசபுரம் மேல்நிலைத் தொட்டி மற்றும் சண்முகபுரம் மேல்நிலைத் தொட்டி வரை புதியதாக DI pipe குடிநீர் நீருந்து குழாய் -4700m நீளத்திற்கு மாற்றி அமைக்கும் பணி. |
| **வ.எண்** | **பணியின் விபரம்** |
| 3 | சந்தைப்பேட்டை நீருந்து நிலையம் முதல் அம்பேத்கார் நகர் மேல்நிலைத் தொட்டி, நரிப்பள்ளம் மேல்நிலைத் தொட்டி மற்றும் எட்டிமடைபுதூர் மேல்நிலைத் தொட்டி வரை புதியதாக DI pipe குடிநீர் குழாய் -4560m நீளத்திற்கு மாற்றி அமைக்கும் பணி. |
| 4 | சந்தைப்பேட்டை நீருந்து நிலையம் முதல் மோரூர்கரடு மேல்நிலைத் தொட்டி மற்றும் தொண்டிக்கரடு மேல்நிலைத் தொட்டி வரை DI pipe குடிநீர் குழாய் -3535m நீளத்திற்கு மாற்றி அமைக்கும் பணி. |
| 5 | திருச்செங்கோடு வார்டு எண்.3, கைலாசம்பாளையம் பகுதியில் புதியதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி |

இந்நிலையில், மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தற்போது நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லை. மேலும், செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் (RWS Division) அவர்களின் கடிதம் ந.க.எண்.F.SOE/AWSS T.gode/BA/RWS/NKL/2019/Dt. 29.08.2022-இல் புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் பணிக்கு வழங்கப்பட்ட செலவு அறிக்கையின்படி, மேற்கண்ட பணியில் திட்ட நிதியில் மீதம் ரூ.1095.47 இலட்சம் சேமிப்பு தொகை உள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர் மேம்பாட்டு பணிகளை திட்ட நிதியில் (IUDM 2018-19 மற்றும் 2019-20) உள்ள சேமிப்பு தொகையில் இருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் (RWS Division) துறையின் மூலம் மேற்கொள்ளக் கோரி பிரேரணைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் )RWS Division) துறையின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் பிரேரணைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் )RWS Division) அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

<u>**கோப்பு எண் .11492/2012/இ1**</u>

<u>**நகர்மன்ற தீர்மானம் எண். 439 நாள்.29.12.2022.**</u>

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.44**

நகர்மன்ற தீர்மானம் எண்.335, நாள்.29.09.2022-இன்படி ரூ.2,00,000/-திற்கு கீழ்கண்ட பணியை வருவாய் நிதி 2022-2023-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 16.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள பாய்லர், கிரைண்டர், மிக்சி, Ro Plant மற்றும் இதர சமையல் உபகரணங்கள் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணி **மதிப்பீடு ரூ.2.00 இலட்சம்** | 1. M/s..கணேசன், கோபிச்செட்டிபாளையம்<br>2. திரு .பூபதி.எம். திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (-)0.14 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.50 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.14% குறைவாக கொடுத்துள்ள M/s. கணேசன், கோபிச்செட்டிபாளையம் நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண்.4598/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 440 நாள்.29.12.2022.</u>**

மதிப்பீட்டை விட(-)0.14% குறைவாக கொடுத்துள்ள M/s. கணேசன், கோபிச்செட்டிபாளையம் நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.45**

நகர்மன்ற தீர்மானம் எண்.318, நாள்.30.08.2022-இன்படி ரூ.3,50,000/-திற்கு கீழ்கண்ட பணியை வருவாய் நிதி 2022-2023-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 16.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றத் தலைவர் அறையில் கூடுதலாக அலுமினியத் தடுப்பு அமைக்கவும், டேபிள், சேர் புதியதாக வாங்கவும் மற்றும் பொறியியல் பிரிவில் உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் அறைக்கு பழுது பார்க்கவும் மற்றும் புதியதாக டேபிள், சேர்கள் வாங்கும் பணி **மதிப்பீடு ரூ.3.50 இலட்சம்** | 1. திரு.எம்.பூபதி, திருச்செங்கோடு<br>2. திரு.என்.சிவக்குமார், திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (-)0.39 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)2.14 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.39% குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.பூபதி, திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண்.5884/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 441 நாள்.29.12.2022.</u>**

மதிப்பீட்டை விட(-)0.39% குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.பூபதி, திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.46**

நகர்மன்ற தீர்மானம் எண்.336, நாள்.29.09.2022-இன்படி ரூ.45000/-திற்கு கீழ்கண்ட பணியை வருவாய் நிதி 2022-2023-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 16.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி அலுவலத்தில் முதல் தளத்தில் நகர்மன்ற தலைவர் அறை, நகரமைப்பு பிரிவு மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கம் ஆகிய பகுதிகளில் கூடுதலாக கண்காணிப்பு கேமிரா (CCTV) பொருத்தும் பணி **மதிப்பீடு ரூ.45000/-** | 1. M/s Spyder Technology, சேலம்.<br>2. M/s Digi Print Solution, சேலம். | மதிப்பீட்டை விட (-)0.35 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.42 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.35% குறைவாக கொடுத்துள்ள M/s Spyder Technology, சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண்.6581/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 442 நாள்.29.12.2022.</u>**

மதிப்பீட்டை விட(-)0.35% குறைவாக கொடுத்துள்ள M/s Spyder Technology, சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.47**

நகர்மன்ற தீர்மானம் எண்.337, நாள்.29.09.2022-இன்படி ரூ.2,26,000/-திற்கு கீழ்கண்ட பணியை வருவாய் நிதி 2022-2023-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 16.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
